5
1-1912





உ

ஷண்முகந்துணை.

441
1-12

தண்டலைச்சேரி யெனவழங்கும்

திருத்தண்டலை நீணெறி

# அரிவாட்டாயநாயனார் திவ்ய

# சரித்திரக்கும்மி.

441

இஃது

கும்பகோணம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் குமாரனும்,

குண்டையூர் ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகர்

மருகரும் மாணாக்கருமாகிய

**சட்டநாத தேசிகரால்**

இயற்றப்பட்டு

நாகபட்டணம்

எட்வர்ட் அச்சுக்கூடத்தில்

T. R. கிருஷ்ணசாமி வஸ்தாதால்

பதிப்பிக்கப்பெற்றது.

**1912.**

O-,85M541,A
N12
147067

உ

ஷண்முகந்துணை.

# அரிவாட்டாயநாயனார் திவ்விய சரித்திரக்கும்மி.

## சாற்றுக்கவி.

கீழ்வேளூர் மாஜி நீஸல்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர்
மு. சரவணைப்பிள்ளையவர்கள் இயற்றியது.

தண்டலை நீணெறியதனிற் சிவபிரானின் றன்னடி
யிற்றொண்டு செயும் மரிவாட்டாயர்
தொண்டுமவர் வருமரபுங் கும்மியாகத்
தொடுத்தான் சுப்பிரமணிய குரவன்பாலன்
துண்டமிழ்தேர் புலவர்களுக்கணியனாகுஞ்
சட்டநாதக்குரவன் றமிழ்வலோனே.

அண்டர்தொழுந்திருத்தண்டலை நீணெறி
யையனடியிணைக்கன்புசெய்யும்
தொண்டரரிவாட்டாயர் கும்மி சொல்லத்
தும்பிமுகவனுங் காப்பாமே.

பூசுரர்வாழ்ந்திடுமண்ணாட்டிற்றிகழ்
பூம்பொழிலோங்கிய தென்னாட்டில்
வாசமலியுங் கணமங்கலமென்னும்
மாநகரத்துக்கதிபதியாம். 1

அரிவாட்டாயரடிபோற்றி அறு
பத்துடன்மூவர் கழல்போற்றி
தெளிவாய்ச் செந்தமிழ் வேதமருளிய
சீருடைநால்வர் பதம்போற்றி.

தாளாண்மையுற்றிடு வேளாண்மையின்முறை
சாற்றுநெறியிற் றவறாத
வேளாளர் நற்குலமுற்றவராமவர்
வேறொருவர்க்கிணையற்றவராம்.

தேவியும் பிறைச்சடைக் காயுமழுக்காத்
தேவினருட்டுணையுற்றவராம்
தாயின் பொறையும் பரிவும் பொருந்திடு
தாயரெனப்பெயர் பெறறவராம்.

அன்னையின் மிக்கபரிவொடு நற்குடி
யாட்சிமைகொண்டிடு மாட்சிமையார்
சென்னெலரிசியுஞ் செங்கீரை மாவடு
தினந்தினமும் பணிவிடையாய். 5

அண்ணலொடன்னைக்கமுதாகச் சொல்லும்
ஆவினிலைந்துமினிதாக
பன்னியொடொன்றும் பரிவாகத்தினம்
பண்பொடு செய்திடுமன்புடையார் 6

காலையெழுந்திப் பணிவிடை செய்துபின்
கார்நெல்லரிசியுணவருந்தி
மாலயன்றேடருந்தாண்முடியண்ணல்
மலர்ப்பதத்தன்பிற்றலைப்படுவார் 7

இப்படி நற்பணி பற்பல நாட்செய்
திருவருமொத்த மனத்துடனே
அற்பொடுறுவதை சோதனை செய்திட
வண்ணல் மனதினிலெண்ணினரே. 8

தாயர்பணிவிடை முட்டுறவெண்ணிய
தையலிட்முறுமையாளுமே

பாயு நன்னீரும் மழையுஞ்சுருங்கிட
பண்ணினரே மனத்தெண்ணினரே 9

கன்னல் பொழிந்திடுமன்னகரின் வளங்
கானலினீரெனவேமறைய
யென்னசெய்வோமென்றிரங்கிய தாயரும்
ஏங்கினரே மனந் தாங்கினரே 10

தேங்கனிச்சோலையோடாம்பலமேடையும்
சென்னெல்விளையுங் கழனிகளும்
பூண்பணியரவும் விலைமாறிச்செய்யும்
மேம்பணியாரப் புரிந்துவந்தார் 11

சொன்னவையாவு மொழிந்திடவேயினி
தோன்றுவதியாதென வூன்றியுன்னி
தன்னிலைவிட்டவர் கூலிக்குவேலைத்
தலைப்படுவாரிற்றலைப்படுவார் 12

என்னவேலை யெவரிட்டாலுமதை
யெள்ளாமற் சற்றுந்தள்ளாமல்
சொன்னபடியே தொழும்புசெய்வோமெனத்
தோன்றினரே மனத்தூன்றினரே 13

ஆளுடனே யரிவாளெடுத்துவயற்
போயடுத்தே வினை தான்முடித்தே
தாளரிதேடிய தர்ப்பரன் நற்பணி
தான்வழுவின்றிவருநாளில் 14

யெத்தனைவேலை முடித்தாலுமவர்க்
கெங்கேபோய்க்கூலி கிடைத்தாலும்
அத்தனுக்காகுஞ் சம்பாநெல்லையன்றி
அவருளுங் கார்நெற்கிடையாதே. 15

ஆயதுகண்டுயர் தாயருமம்மையும்
அன்புடனே மிகுந்தென்புடனே
தூயவர்க்கேயமுதாயதென்றெண்ணி
துடித்தனர் துள்ளிக் களித்தனரே 16

வேலைத்தலைச்சென்றவர் வருமுன்னம்மை
வீட்டிற்பணிசெய்தெழுந்தகன்று
பாலைமுருங்கை பசளையோடின்னும்
பலகீரைகொய்து கறியாக்கி 17

0785 MSY1, A
N12

அன்னமில்லாமலிக்கீரையு நீரும்
அரும்பசிக்குண்டுக் களையாறி
பின்னமில் மாவடுக்கீரையரிசி
பெருமகிழ் வெய்திக் கொடுபோந்தார் 18

சேலைப்பழித்த விழியுமைபங்கன்
திருவுளமிக்கக் களிகூர்ந்து
மேலையுலகுக் கவரை யழைத்திட
காலிவிடறிக் கவிழ்த்தனரே 19

அன்னமில்லாத களைப்பாலும்பணி
அன்றுமுடிந்த இறத்தாலும்
சொன்வுலகக் குறிப்பாலுமைய்யன்
தூயவரிசியை சிந்தினரோ 20

பாங்குறு பன்னிபரிவோடெழுந்துதன்
பத்தாவைக்கையாலெடுத்திடலும்
ஆங்கவர் கையம ராவினிலைந்தும்
அதிர்ந்து கமரிற்கவிழ்ந்ததுவே 21

நஞ்சையருந்தியவருளாவிந்த
நஞ்சைக்கமரிர்க் கவிழ்ந்ததன்மேல்

யென்னசெய்வோம்பணி முட்டியபின்னுயி
ரேனுக்கென்றெண்ணி கழுத்தரிந்தார் 22

வேயுறுதோளி யெம்மன்னையெழுந்து
விரைவோடரனைப்பணிந்தேத்தி
தாயருயிரின்று மாயக்கண்மெனர்
தாழ்ந்ததென்னையவெனத்தொழுதாள் 23

சேயிழையேயினும் ஊட்டியிற் றண்டலை
செய்வதறிவா யெனப்புகன்று
பேயொளித்தேயந்த நஞ்சைக்கமரிடை
பொற்புடனேமிக வர்ப்புதமாய் 24

மாவடு உண்டதுலகறிந்தேத்திட
வாயில்விடேலென்றொலி யெழும்ப
தாயரே நில்லுமெனச்சொல்லி வாளை
தடுத்தனராங் கைபிடித்தனரே 25

வானவர்பூமழை தான்பொழியவிடை
மாதுடனையன் மகிழ்ந்தொளிர
தாயரும் பன்னியும் மாயுலகேத்திட
தன்னுலகென்று மளித்தனரே 26

தாயருலகமறியவே வாளினாற்
றன்கழுத்தையறுத்திட்டதனால்
யேயவுலக மரிவாட்டாயரென்
றேத்திபுகழ்பெற நாட்டியதே 27

ஆண்டுதோறும் மகரம் மதியிற்றிரு
வாதிரைநாளிற் சிறந்தோங்கும்
யீண்டரிவாட்டாயர் உர்ச்சவங்கண்டிடி
லெல்லாப்பாவமும் பறந்தோடும் 28

வேண்டிவந்தார் பலன் கைகூடும் சொலும்
வேதனையாவும் பறந்தோடுந்
தாண்டவமாடிய நித்தன் மலரடி
தன்னருள்வந்து கடைகூடும் 29

ஆயவிதனைப்படித்தோருமகிழ்ந்
தச்சிலிடுவிக்கச் செய்தோரும்
தாயபரனருளாலேயுலகிற்
றுகளுத்தென்று மிகவாழி. 30

## அரிவாட்டாயநாயனார் திவ்விய சரித்திரக்கும்மி

முற்றிற்று.

## அறுசீரடியாசிரிய விருத்தம்.

இத்தலத்தின் மகிமைதனைச் செவியுற்றோரும்
இருவிழியாலுற்சவத்தைத்தெரிசித்தோரும்
சொற்றருமாலயத்தினிய பணிசெய்தோரும்
துன்பமுறுபிறவியெனுந் துகடீர்ந்தொல்கி
நற்றருமவிடைப்பாகனருளாலிம்மை
நலமெய்தி மறுமையினுஞ் சுவர்க்கமாதி
அத்தனுலகமர்ந்து கணத்தலைவராகி
அரியயனுடரியபதம் பெறுவார்தாமே.

## எழுசீரடியாசிரிய விருத்தம்

சொன்னவித்தலத்திற் கன்னலோடாறு
சுவையமுதூட்டிடவல்லார்
மன்னராயிருந்து பெரும்புவியாண்டு
மறலியைத் தடிகுவர்பின்னும்
பொன்பணியாடை புவியொடு கொடுப்போர்
பூதலத்திறைவராயிருந்து
கண்ணனுங் கஞ்சக்கடவுளும் போற்றுங்
கழலிணையடைவர் நிச்சயமே.

O-185 MS41,17
N112

